From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 164/2021

Deposition of witness for: PW - 11

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஆனந்த தாண்டவம்** | Father/Husband Name | : **அண்ணாமலை** |
| Age | : | Calling | : |
| Date | : 02.12.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 02 day of 12.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது தாம்பரம் மாநகர காவல் ஆணையத்தில் தலைமையிடத்து காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 08.02.2022ம் தேதி மதுரை மாவட்டம் ஒத்தக்கடை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் திரு.சிங் என்பவர் நிலைய குற்ற எண் 1227/2020 பிரிவு 457, 380 இதசவில் பதிவு செய்யப்பட்டிருந்த வழக்க கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.08.2021ம் தேதி காலை 11.00 மணிக்கு ஒத்தக்கடை – திருவாதவூர் செல்லும் சாலை காளிகாப்பான் பிரிவில் பெண் காவலுருடன் கூடிய போலீஸ் பார்ட்டியுடன் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது ராஜா என்ற நாகராஜ், மற்றும் சாந்தி என்ற சாந்தா ஆகியோர்களை விசாரணை செய்ய எங்கள் பெயரை கூறியவர்களிடம் விசாரித்தபோது இந்த வழக்கில் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டார்கள், அதன்பேரில் அவர்களை காரணம் கூறி கைது செய்தும், 13.00 மணிக்கு 1ம் எதிரி ராஜா என்ற நாகராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் விக்னேஷ் மற்றும் ராஜா

முன்னிலையில் மடிக்கணிணியில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிகள் ஒத்தக்கடை காவல் நிலைய குற்ற எண்களான 65/2021, 412/2021, 1227/20, 481/2021 ஆகிய குற்ற வழக்கில் சம்மந்தப்பட்டதாக தானாக வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதேதேதியில் 14.15 மணிக்கு 2ம் எதிரி சாந்தா என்பவர் குற்ற 1227/2020 வழக்கில் சம்மந்தப்பட்ட 14 பவுன் நகையினை அவர் கொடுத்து வைத்திருந்ததை கோபிகண்ணனை அடையாளம் காட்டியும், மேற்படி திருடிய நகைகளை உறுக்கி கட்டி ஆக்கி, தனது வீட்டில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர்செய்தார். அதை நான் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அசாஆ 3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **(அந்த சாந்தா என்ற சாந்தி கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

பின்னர் 16.30 மணிக்கு 3ம் எதிரியான கோபிகண்ணன் என்பவர் தானாக வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன்.

பின்னர் 17.30 மணிக்கு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் வந்து எதிரிகளை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கு சொத்துக்களை பின்னர் கைப்பற்ற வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். **(அந்த படிவம் 91 அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது ). (அந்த 14 பவுன் நகையை அடையாளம் காட்டும் புகைப்படம் அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** இந்த வழக்கின் 1 மற்றும் 2வது எதிரிகளின் ஒப்புதல் வாக்குமுலத்தின் அடிப்படையில் 3ம் எதிரி கோபிகண்ணனை இவ்வழக்கில் எதிரியாக சேர்த்து சட்டப்பிரிவினை 457, 380 இதச

பிரிவிலிருந்து, பிரிவு 457, 380, உ/இ 414 இதச ஆக சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த சட்டமாறுதல் அறிக்கை அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ).** பின்னர் இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரிகள் 1மற்றும் 2 மீது இதச பின்னர் இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரிகள் 1மற்றும் 2 மீது இதச பிரிவு 457, 380 இதசன் கீழும், 3ம் எதிரி 414ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் ஆஜர்.**

**(எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை, குறுக்குவிசாரணை இத்துடன் முடித்துவைக்கப்படுகிறது .)**